DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | DVC. No. 07/2023 |
| Deposition of witness | : | PW- 1 |
| Name | : | லாவன்யா |
| Father's /Husband Name | : | ராமகிருஷ்ணன் |
| Village | : | ஏனைகுடி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 31 |
| Occupation | : | இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 18th day September 2024.
Respondent present.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

வழக்கு விபரங்களை வழக்கறிஞரிடம் யார் கூறினார்கள் என்றால், நான் தான் கூறினேன். எதற்காக மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஜீவனாம்சம் மற்றும் எனது பொருட்கள் கேட்டு மனு தாக்கல் செய்துள்ளேன். நான் வேறு எந்த கோரிக்கையும் கேட்கவில்லை என்றால் சரிதான். மனுவில் கோரியுள்ள மற்ற விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் அனைத்து விபரங்களையும் கூறிதான் மனு தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கில் எனது முதன்மை கோரிக்கைகள் ஜீவனாம்சம் என்றால் சரிதான். மற்ற விபரங்கள் பொருட்கள் பெறுவது தொடர்பாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் G.N.M.I டிப்ளமோ நர்சிங் G.N.M.I படித்துள்ளேன். நான் வேலைக்கு சென்று பொருள் ஈட்டக்கூடிய திறமை உள்ளது என்றால் சரிதான். நான்வேலைக்கு சென்றால் மாதம் பதினைந்தாயிரம் ஊதியம் கிடைக்க வாய்ப்புள்ளது. நான் ஏற்கனவே வேலைக்கு சென்றுள்ளேன் என்றால் சரிதான். நான் இப்பொழுது வேலைக்கு செல்கிறேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் B.A., வரலாறு படித்துள்ளார். அவர் கார் ஓட்டுனராக உள்ளார். ஒருநாளைக்கு வேலைக்கு சென்றால் ஐநூறு ஊதியம் பெறுவார் என்றால், ஐநூறு முதல் ஆயிரம் வரை பெறுவார். எதிர்மனுதாரர் ஆயிரம் வரை ஊதியம் பெறுவார் என்று நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிர்மனுதாரர் **குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.